Registered No. M. 408.

உ

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு.

திங்கட்கொருமுறைதோன்றிநிகழ்வது.

THE THIRUNAVUKARASU.

PUBLISHED ONCE IN A MONTH.

பத்திராதிபர்—தி. பா. சிவராமபிள்ளை.

புத்தகம் உ] திருநெல்வேலி: குரோதிஞு மாசிமீ ௰அ-உ; 1905-ம்ஞு மார்ச்சுமீ 1-உ [இலக்கம் உ.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு."

உ

திருச்சிற்றம்பலம்.

"என்றுமோ ரியல்பின ரெனநினை வரியவ ரேற
தேறிச், சென்றுதாஞ் செடிச்சியர் மனைதொறும் பலி
கொளு மியல்பதுவே, துன்றுதண் பொழினுழைந் தெ
ழுவிய கேதகைப் போதளைந்து, தென்றல்வந் துலவிய
திருநெல்வேலி யுறை செல்வர்தாமே"

"என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
வெருதேறி யேழை யுடனே, பொன்பொதி மத்த மாலை
புனல்சூடி வந்தெ னுளமே புகுந்த வதனால், ஒன்பதொ
டொன்றொ டேழு பதினெட்டொ டாறு முடனாய நாள்
களவைதா, மன்பொடு நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடி
யா ரவர்க்கு மிகவே"

திருச்சிற்றம்பலம்.

மாணவர்க்கு
ஓர் கவனிப்பு.

மாணவர்காள்!

நீங்கள் கல்வி கற்கும் பருவத்தில் இருக்கின்றீர். நீங்கள் கற்கும் புத்தகங்கள் உங்கள் பெரியோர் அனுபவத்திற் கண்ட விஷயங்களை அடக்கியிருக்கின்றன. நீங்கள் அப்புத்தகங்களிற் கற்கும் விஷயங்களெல்லாம் உங்கள் நுண்ணிய புத்தியில் ஒருவாறு விளங்குமேயன்றி ஐயமற விளங்கமாட்டாது. நீங்கள் புத்தகப் படிப்பை விட்டு உலகானுபவத்தைக் கற்கும் பருவத்தில் வந்த காலையில் அவ்விஷயங்கள் திடமுற உணரப்படும். ஆதலால் கற்ற ஞானத்தைக் கொண்டு மாத்திரம் எவ்விஷயத்தையும் சித்தாந்தப்படுத்துவது குறைவுடையதாகவே காணப்படும். ஆகவே வித்யாப்பியாச காலத்தில் உங்கள் பருவத்திற்கு மேலான கொள்கைகளை விவாதிப்பது தகாது. உங்களைவிட அதிக அநுபவமுடைய பெரியரைக்கொண்டே விவாதாம்சங்களை உணர்ந்துகொள்வது உசிதமாம்.

தற்சமயம் ஜாதிவேற்றுமை விஷயமாகத் திருநெல்வேலியின்கண் நடந்து வருகிற உபந்யாசங்களைக் கவனியுங்கள். அவ்விஷயத்தில் இருதிறத்தினரும் அவரவர் கொண்ட கக்ஷியைச் சாதித்தலுங் கூடும். ஒருகக்ஷி வெல்வதும் தோற்பதும் கல்வித்திறமையைப் பொறுத்து நிகழ்தலுங்கூடும். இவ்விஷயத்தில் பெரியோரை அடுத்து ஐயம் தீர்த்துக்கொள்ளலாமெனின் அவரும் ஏதாவது ஒரு பக்ஷத்தில் அபிமானமுடையவராக இருத்தல்கூடும்; ஆயினும் அப்பெரியோரது அரிய வாக்கியங்களுடன் உங்களுடைய யூகானுபவத்தையும் ஒப்ப நோக்கி ஒருவாறு தெரிந்துகொள்வது கடமையாம். நிற்க.

ஜாதி வேற்றுமை விஷயமாக என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைச் சித்தாந்தமாக நாட்ட வரவில்லை. இவ்வுலகத்திலுள்ள ஜனங்களின் பூர்வீக அனுஷ்டான வரலாறுகளையும் அவர்களது ஜன்ம வரலாறுகளையும் தெளிவாய் உணர்த்தத் தக்க கருவி நூல்கள் திட்டமான காலவரையறையுடன் கிடைத்தாலன்றி, நாம் அது விஷயத்தில் தீர்மானமான முடிவுக்கு வருதல் அரிது எனினும் தற்காலம் கிடைக்கத்தக்க நூல்களையும் பொதுவான நியாய உணர்ச்சியையுங் கொண்டு ஒருவாறு விவகரித்துப் பார்க்கலாம்.

தற்காலம் வழங்கும் ஆங்கிலப் பூகோள சாஸ்திரமானது இவ்வுலகத்தை ஐந்து அல்லது ஆறு கண்டங்களாக வகுக்கின்றது. அவ் ஐந்தனுள் ஆசியாகண்டம் ஒன்று. அவ் ஆசியாகண்டத்துள் இந்தியாவானது தெற்கொடுக்கமுள்ளது. அதில் வசிக்கும் பல மதஸ்தருள் ஹிந்துக்கள் ஓர் பெரும் வகுப்பினர். இந்த ஹிந்து மதஸ்தருள்ளும் பல பாஷைகள் பேசுகிற ஜனங்களும் உளர். அவருள்ளும் சம்ஸ்கிருதம் பேசுகிற ஜனங்களுக்குள் தான் தற்காலம் விவாதிக்கிற பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்கிற ஜாதி வகுப்பு ஏற்பட்டிருப்பதாக சம்ஸ்கிருத நூல்களில் விளங்குகின்றது. அந்நூல்களிற் பிரதானமானவை தர்மசாஸ்திரங்கள். அவற்றுள் மனுதர்ம சாஸ்திரமானது முக்ய ஆதாரமாகின்றது. அது ஜாதி ஆசாரங்களைப் பற்றி பிரஸ்தாபிக்கின்றது. அந்நூலில் க-வது அத்தியாயத்தில் (லோகாநாம், து, விவிருத்யர்த்தம்) என்று தொடங்கிய 31-வது சுலோகத்தில் உல

கையொப்பவிகிதம்:— உள்ளூர், வெளியூராருக்குத் தபாற்கூலி யுட்பட முன்பணமாக ஒரு வருஷத்திற்கு ரூ 1, மோர்மேன் சிங்கப்பூருக்கு ரூ 2, தனிப்பிரதி 1-க்கு அணா 2.

கம் பெருகும்பொருட்டு பிரமாவின் முகம், வாகு, தொடை, பாதங்களி னின்றும் முறையே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்ரர் என்கிறவர்கள் உண்டானதாகவும், 10-வது அத்தியாயத்தில் (அஹிம்ஸா, ஸத்யம்) என்று தொடங்கிய 63-வது சுலோகத்தில் அஹிம்ஸை (கொல்லாமை) சத்யம், கள்ளாமை, தூய்மை, ஐம்புலனடக்கமு நான்கு வருணத்தாருக்கும் பொதுத் தர்மமாக மனுவிதித்தார் எனவும் காணப்படுகின்றது. இதனை ஆலோசிக்குமளவில் தொழிலின் தாரதம்யத்தின் பேரில் இலௌகிகமாக நான்கு ஜாதியாருக்குளும் பெருமை சிறுமை ஏற்பட்டுள்ளதென்பதும், அக்காலத்தில் இப் பாகுபாடு இலாவிடில் உலககாரியம் நடைபெற மாட்டாதென்பதும் ஒருவாறு ஊஹிக்கத் தக்கதாகின்றது. ஆனால் பரலோகத்திற்குச் சாதனமாயுள்ள யோக்கியதையானது நான்கு ஜாதியாருக்கும் ஒருங்கே வகுக்கப்பட் டிருக்கின்றது. இவ்விஷயத்தில் தாரதம்யம் கற்பித்திருப்பதாகத் துலங்கவில்லை. இவ்வுலகத்தில் மூளை வேலையுள்ளவர்களுக்கு விசேட மதிப்பும், மூளையின் விசேட உதவி வேண்டாத தொழில்களுக்கு அவ்வளவு மதிப்பின்மையும் ஏற்பட்டிருப்பது இயல்பே. ஆதலால் மூளை வேலைக்கு உரிமைப்படுத்தப்பட்ட பிராமணர்களுக்கு விசேடப் பெருமையும் மற்றவர்க்கு அவ்வள வின்மையும் காணப்படுகின்றது. ஆயின் அனைவரும் பிராமணர்களுடைய தொழிலைக் கைப்பற்றலாகாதோவெனின், அவ்விஷயத்தில் காலத்திற்கேற்ப ஜனங்களுடைய நன்மையைக் கருதி அரசர்கள் இயற்றும் விதிகளே ஆளத்தக்கன. மனுதர்ம சாஸ்திரம் உண்டான காலத்தில் இருந்த ஜனங்களின் இயல்புக்குத் தக்கவாறு அவர் விதித்தனவே அமைவுடையதென ஊஹிக்கத் தக்கதாம். தற்காலம் ஆங்கிலேய அரசர் கல்விச்சாலைக்கு ஏற்படுத்திய சம்பளங்களில் ஹிந்துக்களுக்கு ஓர் விதமும் மகம்மதியருக்கு ஓர் விதமும் ஆண்பாலருக்கு ஓர் விதமும் பெண்பாலருக்கு ஓர் விதமுமாகச் சட்டங்கள் ஏற்படுத்தி யிருக்கின்றனர். சில ஜில்லாக்களில் அரசாங்க உத்யோகங்களுங்கூட சில ஜாதியார் கிடைக்காதபக்ஷத்தில் சில ஜாதியாருக்குக் கொடுப்பதென விதித்திருக்கின்றனர். இதனால் அரசாங்கத்தாரைப்பக்ஷபாதமுள்ளவர்களென்று கூறத்தகுமா? தகாது. ஒவ்வோர் நோக்கம்பற்றி பொதுவாக ஜனங்களுடைய நன்மையைக்கருதியே விதிகள் பிறப்பித்திருக்கின்றனர். அந் நோக்கம் நிறைவேறி வரவே, அவ்விதிகளைக் காலத்திற்குத் தக்கவாறு மாற்றவும் செய்வர். அவ்வாறு ஜாதி வேறுபாடு விஷயத்திலும் தொழில்கள் காலத்துக்குத் தக்கபடி மாறுபட்ட போதிலும் யோக்கியதையானது எத்தொழிலைச் செய்தாலும் ஒருப்போலவே வேண்டப்படுமென்பதை மகான்கள் கருதிக் குணயோக்கியதையை நான்கு வருணத்தாருக்கும் பொதுப்பட வகுத்துள்ளார். ஆகவே தொழில் பற்றி ஏற்பட்ட ஜாதி வகுப்பை உள்ளவாறு உணராமல் ஜாதி விவகாரத்தை விசேடமாகப் பெருக்கி *உள்ள ஒற்றுமையையும் பின்னப்படுத்தாம லிருப்பதே மேலானதோர் செயலாம்.

இலக்குமணப்போற்றி.

* இதுவே எமது கொள்கையுமாம். (ப—ர்.)

உ

சிவமயம்.

திருநாவுக்கரசு

திருச்சிற்றம்பலம்.

“திருநாவுக் கரசடி யவர்நாடற் கிநிதி-தெளிதே
னைத் தினியசொன் மடவாரூர்ப் பசிமுதல், லுருவா
லைத் தரிவையர் நடமாடிச் சிலசில-வசியாகச் சொலுமவை
துகளாகக் கருதிமெய், யுருஞானத் திண்மன முருகா
நெக் கழுதுகண்-ணுழவாரப் படைகையி லுடையான்
வைத் தனதமிழ், சுருவாகக் கொடுசிவ னடிகூடத் திரிப
வர்-குறுகார்புக் கிடர்படு குடர்யோனிக் குழியிலே”

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வேலிஜில்லா, சிவதேவஸ்தான கமிட்டியாரும், சிவாகம பாடசாலையும்.

வேதம், சிவாகமம் என்னும் இவ் விருநூல்களும், இறைவனால் அருளப்பட்ட மெய்ந்நூல்களாம். மற்றைய நூல்களெல்லாம், இவை இரண்டினின்றுமே விரிந்திருப்பனவாம். ஆதலால், இவையிரண்டுமே முதனூலென் றுயர்த்துக் கூறப்படுவனவாம். உலகர் சத்திநிபாதர் என்னும் அதிகாரிகளின் பேதத்தால், இங்ஙனம் இறைவனூல் இரண்டாக வைத் தெண்ணப்பட்டன.

வேதம் பொருள் பலபடக் கிடக்கும் சூத்திரம்போலும். சிவாகமம் அச் சூத்திரத் துட்பொருள் இனிது விளங்கத் தெளித்துரைக்கும் பாடியம்போலும்; அது வேதத்தின் சித்தாந்தப் பொருளைச் சொல்லுதலாற், சித்தாந்த நூலெனவும்படும். சனகர் முதலிய முனீந்திரர்கள வேதத்தை நெடுநாட் கற்றும் கேட்டும் அதன் உண்மைப்பொருள் தெளியமாட்டா ராயினா; பின் இச் சித்தாந்த நூலைச் சிவன் போதிக்கத் தெளிந்தனர். எனவே, ஆறங்கங்கள்கொண் டறியப்படும வேதத்தின் உண்மைப்பொருள், சிவாகம வுணர்ச்சிகொண்டே தெளியப்படுமென்ப தாயிற்று. ஆகவே,

வேதநூற் பரிபாலனம் வேண்டப்படுவதொன்றாயின், அதனோடு அவ் வேதநூற்பொருள் தெளித்துக் கூறும் சிவாகமநூற் பரிபாலனமும் உடன்வேண்டப்படுவ தொருதலையாம்.

அன்றியும், வேதநூற் பரிபாலனத்தாற் பெரிதும் பயன்பெறுதற் குரியார், அவ் வேதத்தை

ஓதுமுரிமையைத் தமக்கேயுடைய அந்தணரொன்னும் அவ் வொருபகுதியாரே யாவர். சிவாகம பரிபாலனத்தாற் பயன்பெறுதற் குரியார். சிவாகமோக்த சிவ தீக்ஷாவான்களா மதிகாரிகள் பலரும் உரியர். ஆகவே, வேதநூற் பரிபாலனத்தாற் பயன்பெறுவார் ஒரு சிலரும், சிவாகமநூற் பரிபாலனத்தாற் பயன்பெறுவார் மிகப்பலரு மாவர் என்பது தேற்றம்.

வேதநூற் பரிபாலனமும், ஆறங்கங்கள்கொண் டுணரப்படும் வேதப் பொருளுணர்ச்சி யின்றி, விளக்கமுறுத லின்றும். அது "ஆதிமறை யோதி அதன்பயனொன்றும் உணரா, வேதியாசொல் மெய்யென்று மேவாதே" என்று ஆணை தந்தருளும் அருமைத் திருவாக்கால் இனிதுணர்ந்துகொள்ளப்படும். அவ் வேதப் பொருளுணர்ச்சியும் சிவாகம உணர்ச்சியின்றாயிற், றெளிந்திடுத லில்லை என்பது முற் கூறப்பட்டது. படவே, வேதநூற் பரிபாலனமும் சிவாகமநூற் பரிபாலனத்தாலேயே மிகவும் விளங்கிச் சிறப்பெய்து மென்பது சொல்லாமலே விளங்கும்.

இத் திருநெல்வேலியிலே, "வேதாத்தியயன பாடசாலை" யொன்று, ஓர் புண்யசீலராற் பதிட்டை செய்யப்பெற்று, வெகு சிறப்பாய் நடைபெறுகின்றது; அதனால், வேதநூற் பரிபாலனம் ஒருவகையாற் பேணப்படுகின்றது; அவ் வியல்பிலாவது சிவாகமநூற் பரிபாலனம் பேணப்படவில்லை. சிவாகமங்களும் அவற்றின் உபாகமங்களும் இந்நகரத்திலே, சில சிவநேசச் செல்வர்களிடத்தே இருந்தனவென்றும், அவை பரிபாலிப்போ ரின்மையாற் கிலமாய்ப்போய், இப்பொழுது பெரும்பாலும் இறந்தொழிந்தனவென்றும் கேள்விப்படுகின்றோம். இங்ஙனம் உயிர்க்குறுதி பயக்கும் உண்மைநூல்களை இழத்தல் மிகவும் விசனிக்கத்தக்கதேயாம். இதனை இப்பொழுதுள்ள சைவாசாரியர்களும், சைவப்பிரபுக்களும ஒரு சிறிதும் கவனிக்கின்றார்களில்லையே! இவர்கள் கவனிக்காவிடில், வேறுயார்தாம் கவனிப்பார்கள்? அந்தோ!!

சின்னாண் முன்னர், இத்திருநெல்வேலி ஜில்லா சிவதேவஸ்தான கமிட்டியார், தமதாளுகைக் குட்பட்ட சிவதேவஸ்தானங்களிலுள்ள ஆதிசைவர்கள் பொருட்டு, இத்திருநெல்வேலியிற்றானே, குறித்த கமிட்டியின் பொருட்செலவிலே, ஓர் "சிவாகம பாடசாலை" பதிட்டை செய்யும் நோக்கமுடையராய், அதன்பொருட்டுச் செலவாகுந் தொகைப்பொரு ளிவ்வளவாமென்பதை மதிக்கும்பொருட்டுத் தம்முள் ஒருவரை நியோகித்தனர். அவ்வாறு நியோகித்து நெடுநாளாகியும், இதுவரை, அதன் மேற் பரபரப்பாய் யாதொரு முயற்சியும் அவர்களால் நடைபெற்றதாய்த் தெரியவில்லை. நன்மையொன்றற்கு இடையூறு பலவுள வென்பவாகலின், அம்முயற்சியை நடைபெறவொட்டாது தடுக்கும் இடையூறுகள் எத்தனையாக இருக்கின்றனவோ, அவற்றி னியல்பை யாம் அறிகிற்கிலம். ஆயினும், குறித்த கமிட்டியார்கள் துணிந்தால, இச் "சிவாகம பாடசாலை"ப் பதிட்டை அவர்கட் கியலாத காரியமன்று.

குறித்த "சிவாகம பாடசாலை"ப் பதிட்டை தமதாளுகைக் குட்பட்ட சிவதேவஸ்தான அர்ச்சகர்கள்பொருட்டே செய்யப்படினும, அவர்கள் அப்பாடசாலையை விதிப்படி பதிட்டைசெய்து, சம்ஸ்கிருதம், தமிழ் என்னுங் கடவுட் டிருமொழிகளிரண்டினும் வியுத்பத்தி பெரிதுமுடைய சிவதீக்ஷைப்பேறுடைய தக்க சிவாகம பண்டிதர்களைப் போதிய பொருளுதவி செய்து, போதகாசிரியர்களாக நியோகித்துச், சிவாகமோக்த சிவதீக்ஷாவான்களாய்ச், சிவசாஸ்திர வியுத்பத்திக்கண் விருப்புடையராம் அதிகாரிகளாய்வரும் ஏனைச் சைவ நன்மாணுக்கர்களும் அதன்கட் பயிறற் கிடந்தந்து, அதனைத் தக்கபடி நடைபெறுத்தவல்லர்களாயின், அநேகர் அப்பாடசாலையிற்பயின்று சிவாகமபாண்டித்தியம் பெற்றுச், சைவநன்னெறி கடைப்பிடித் தொழுகிச், சிவானந்தப் பெருவாழ்வுபெற் றுய்தி கூடுதற் கேதுவாம். அம்மட்டோ! அம்மாணுக்கர்கள் தாம் கற்றுத்தேர்ந்த சிவாகமநூற்பொருளைப்பலர்க்கும்போதித்துத், தேயமெங்கும் சைவ நன்னெறி தழைத்தோங்குதற்கு மேதுவாம். இங்ஙனம் சைவநன்னெறி தழைத்தோங்குதற்கேதுவாம் இச் "சிவாகம பாடசாலை"ப் பதிட்டை செய்யும் கமிட்டியார் எத்துணைப் புகழும் புண்ணியமும் பெறுவர் !! ஆகையால், இத்தகைய சிவதருமத்தைக் காலந்தாழ்க்காது, மிக விரைவிற் செய்துவக்குமாறு குறித்த கமிட்டியார்களைப் பன்முறையும் வேண்டுகின்றோம்.

பரமவிணயே பாடுவார் இடம்.

திருக்குற்றால மாலை.

திருக்குற்றாலத் தலபுராணமுடையார்,
திரிகூட ராசப்ப கவிராஜமூர்த்திகள் அருளியது.

(முன்தொடர்ச்சி.)

செகந்தோறுஞ் சென்று செனித்தலுத் தேன்சென்மந் தோறும்புல்லர், முகந்தோறுஞ் சென்றலுத் தேனிரங் காய்முனி வோர்மடவா, ரகந்தோறு முண்பலிக் காகடந் தாயயன் மாலென்றிங்கே, யுகந்தோறும் பேர்பெற் றிருந்தாய்குற் றாலத் துறைபவனே. (85)

சென்னிற வேழ முகத்தெம் பிரானையுந் தென்னிலஞ்சிப், பன்னிரு கையனை யும்பயந் தாய்வெற் பரசன்பெற்ற, கன்னியைக் கைவச மாக்கிக்கொண் டாயென் கருத்தையெல்லா, முன்னிரு தாள்வச மாக்காய்குற் றாலத் துறைபவனே. (86)

வாலத் தனையு மொடுக்கிமிக் காய்வினை வாயமிழ்ந்து, காலக் கடும்புலி பாயுமுன் னேசெண்ப காடவிக்கே, யேலக் குழன்மட மாதொடு நீயு மிருந்ததிரு, வோலக்கங் காட்டி யருள்வாய்குற் றாலத் துறைபவனே. (87)

பத்தியு மில்லை வயிராக் கியமில்லை பாரிலுண்மைச், சத்திய மில்லை தவமா கிலுமில்லை சார்ந்த குணப், புத்தியு மில்லை கொடியே னிருந்ததுர்ப் புத்திக்குநீ, யொத்திருந் தெப்படி யாள்வாய்குற் றாலத் துறைபவனே. (88)

பழுக்குமுன் னேயுட னோய்க்குமுன் னேபதைத் தாவியெல்லாம், நழுக்குமுன் னேயுட்கி னாறுமுன் னேநமன் பாசத்தினா, விழுக்குமுன் னேகண்கள் மூடுமுன் னேயிர தங்கடைவா, யொழுக்குமுன் னேவந்து தோன்றாய்குற் றாலத் துறைபவனே. (89)

குருவாக் கியங்கள்கல் லேன்பத்தர் கூடுங் குழாத்திற் சென்றுன், திருவாக்கு முண்மை தெளிந்துகில் லேன்றெளி வேதுமின்றி, யிருவாய்க் கிடுமெலும் பானேன் முழுப்பித்த னென்னையுமோ, ருருவாக்கி விட்டென்னை யாள்வாய்குற் றாலக் துறைபவனே. (90)

சுகதுக்க பாசத்தி னாலே பிறவித் துவட்சிக்குநான், முகம்வைத்த மோசந் தவிர்ந்திட வேமுத லந்தமிலாப், பகலுற்ற சுத்த வெளிக்கே யிருக்குநின் பாதபத்ம, யுகபத்தி முற்றுந் தருவாய்குற் றாலத் துறைபவனே. (91)

வினைப்பா தகர்க்குண் முழுப்பாவி யாகியும் வெட்கமின்றி, யெனைப் பார்க்க யார்மிக்க ரென்றெண்ணு வேனுனை யென்றுமொன்றாய், நினைப்பா ரிகழ்ச்சி மகிழ்ச்சிவந் தாலு நிலைமைவிடா, ருனைப்பாரஞ் சாட்டி யிருப்பார்குற் றாலத் துறைபவனே. (92)

எனதெனக் கென்று தவிப்பதல் லாலுனை யெண்ணுதற்கென், மனதுசற் றாகிலு முண்மையுண் டோவஞ்ச னேனுமுனைத், தனதுபட் டாதிக்கம் போலே தமிழ்க்கவி சாற்றுவது, முனதுகட் டாயத் தொழில்காண்குற் றாலத் துறைபவனே. (93)

முடக்கிட்ட மாயப் பிறவிக்குள் ளேவிட்டு மூட்டியென்னைத், துடக்கிட்டு நானென்ற பேச்சிட்ட தென்வனை சூழ்ந்தவட்டக், கடற்குட்ட மிட்ட புவனிக்கெலாமொரு காலமதி, லுடக்கிட்ட சூத்திர தாரீகுற் றாலத் துறைபவனே, (94)

அன்பது வைத்துனைப் போற்றுகி லேனடி யார்க்கெளியா, யென்பது சற்றுங் கருத்திலுன் னேனென்னை யாட்கொள்வையோ, முன்பது மத்தயன் மாலான வாமுதலொன்றாக்கொவ்வா, வொன்பது மான வொளியேகுற் றாலத் துறைபவனே. (95)

மலைவாய்க் குவடன்ன வார்முலை யார்க்கு மயல்கொடுதேக், கிலைவாய்ப் படுபுனல் போலலைந் தேனஞ்சலென்றருள்வா, யலைவாய்ப் படாததெள் ளாரமு தேதுளை யாதமுத்தே, யுலைவாய்ப் படாதசெம் பொன்னேகுற் றாலத் துறைபவனே. (96)

தடுக்கும் பொழுதி லணுவள வேனுந் தடுத்துக்கொள்வாய், கொடுக்கும் பொழுதிலெல் லாங்கொடுப் பாய்திருக் கூத்துக்குநீ, யெடுக்குஞ் சொருபங்க ளாரறி வாரெனை யாள்புலித்தோ, லுடுக்குஞ் சதானந்த யோகீகுற் றாலத் துறைபவனே. (97)

நின்னாச் சிரம முனியாச் சிரம நினதடியார், பொன்னாச் சிரமமும் பூவாச் சிரமமும் பூமடந்தை, மன்னாச் சிரமமு மன்னுவர் காண்மனத் தாலுமஞ்சா, குன்னாச்சிரம பதத்தாய்குற் றாலத் துறைபவனே. (98)

திரையற்ற ஞானக் கடலுடை யாயுனைச் சேர்ந்துசென்மக், கரையற்ற வாரி கடக்கின்ற வாறு கருணைசெய்வாய், புரையற்ற தொண்டர் மனத்தே யிருந்து பொருள்விளக்கு, முரையற்ற மோன வுணர்வேகுற் றாலத் துறைபவனே. (99)

நித்தர்கள் போற்றுநின் னாவணி மூலத்தி னோர்ந்துவந்து, முத்தமிழ் பாடக் கருணைசெய் தாண்டனை முற்றுமினிக், கொத்தடி யேனுக்குன் பொற்பதந் தாகுழல்வாய்மொழியா, ளுத்தமி பாக முவந்தாய்குற் றாலத் துறைபவனே. (100)

முற்றிற்று.

C. சுப்பிரமணியக்கவிராஜர்.

விஜயகேசரி.

"விக்கிரகாராதனங் கூடாதென்றால், வேறென்ன வணக்கஞ் செய்யலாம்?

திருநெல்வேலியிலே சிலகாலமாக விக்கிரகாராதனத்தைக்குறித்த கட்சிப்பிரதிகட்சிகள் நடப்பதாக அறிகிறோம். இந்துக்களுள் அந்நியமத வாசனையால் மனம் பேதலித்த சிலர் விக்கிரகாராதனம் செய்யலாகாதென்கின்றனர். இந்து மதம் பேணுபவர் பலர் விக்கிரகாராதனம் வேண்டுமென்பதற்குப் போந்த நியாயங் கூறுகின்றனர். விக்கிரகாராதனங் கூடாதென்னுங் கட்சிக்காரரை நாமொன்று கேட்கின்றோம். விக்கிரகாராதனங்கொண்டு கடவுளை வணங்குதல் வேண்டற்பாலதன்றென்றால், வேறெந்தவழியினாற் கடவுளை வணங்கலாம்? நம்மாற் பற்றப்படும் புலன்கள் இந்திரியங்களின் வழியாலன்றி வேறொன்றாலும் பற்றப்படா. இந்திரியங்களாற் பற்றப்பட்ட விடயங்களையே மனமுதலிய கரணங்களும் பற்றும். மனமுதலிய கரணங்களால் வரப்பட்டவைகளையே நம்மறிவும் உணரும். நம்முடைய அறிவின் றொழிலுக்கு அந்தக்கரணங்களும் இந்திரியங்களுமே வியஞ்சகங்களா யிருக்கின்றன. இவைகளையின்றி அறிவுதனித்து ஒருநாளுமறியாது. அதனால், அவ்விந்திரிய அந்தக்கரணங்களுக்கு விஷயமாகத்தக்க வழிபாடு விக்கிரகாராதனமேயென்று இந்துக்கள் கொண்டுவணங்குகின்றனர். எங்குமாயிருக்குங் கடவுளை விக்கிரகத்தில் வணங்கலாகாதென்னின், எங்குமாயிருக்குங்கடவுள் விக்கிரகத்திலுமிருப்பாராதலால் விக்கிரகத்திலிருக்குங் கடவுளைவணங்குதல்குற்றமாகாது. அது குற்றமாயின் விக்கிரகம்போன்ற "எங்கும் அவரிருப்பராதலின் விக்கிரகம்போல ஒவ்வோரிடமும் கழிக்கப்பட்டு

எங்குமே வணங்கலாகாதென்றும். எங்குமாய் வணங்குதல் குற்றமாகாதெனின், எங்குமாகப் பற்றுதற்கு இந்திரியங்கள் எங்குமில்லாமையால் இயல மாட்டாது. மனத்தாற் பற்றலாமென்னின், மனம் இந்திரியங்களா லறியப்பட்டவற்றையன்றி அறியப்பாடதவற்றைத் தனித்துப் பற்றமாட்டாது. பற்றுமெனினும், மனம் கடவுளிருக்குமிடமெங்கும் வியாபகமா யிருப்பதுமன்று, அதனால் எங்குமாகப் பற்றமாட்டாது; தான் இருக்கும் ஏகதேச நிலையில் ஏகதேச வடிவையே பற்றும். கடவுளின் வியாபகத்தில் ஏகதேசம் பற்றப்படின் அவ்வேகதேசத்தின் பெயரென்னை? விக்கிரகமாக வணங்கலாகாதென்பார்க்கு அதுவும் விலக்காகுமே. ஏகதேசமாய் வணங்கினும் கடவுளுக்கு ஒரு வடிவங் கற்பித்து வணங்குதல் கூடாதென்பது தான் நமது மதம் என்பரேல், கடவுளது வடிவற்ற நிலை ஞானமயமாகும். அந்த ஞானானந்த சொரூபநிலை இந்திரியங்களுக்கு எட்டுமா? எட்டாதே. மனமுதலிய கரணங்களுக்கேனும் எட்டுமா? அதுவும் எட்டாதே. அதனாலன்றோ அவர் [மனவாக்குக் காயங்களுக் கெட்டாதவர்] அவாங் மனோ கோசரப்பொருள் எனப்படுகின்றார். அப்படியெட்டாத வொன்றை எட்டியெட்டிப் பார்ப்பதாலாம் பயனென்னை? எட்டாதவர் எட்டவேமாட்டாராகையால் மனமுதலியவைகளால் தியானிப்பதும் வாக்கினால் துதிப்பதும் காயத்தால் வழிபடுவதும் ஒரு பயனுமற்ற வீண்வேலையாய் முடியுமன்றி வேறென்னும். அப்பொழுது மனத்தால் தியானிக்கின்றோம், வாக்கால் துதிக்கின்றோம், காயத்தால் வணங்குகின்றோமென்று அவற்றைச் செய்து பயன்கிடைக்குமென்று காத்திருக்குமிவர்கள் இலவு காத்த கிளிபோல் ஏமாந்த சோணகிரிகளாக மாட்டார்களா? கடவுள் அவாங் மனோகோசரப்பொருள் என்பதை யோசியாமல் அவைகொண்டு அவருடைய உண்மை வடிவை வழிபட்டுவிடுவோமென் றெண்ணுதல் அல்லது சொல்லுதல் எவ்வளவு அறியாமை; இது விவேகிகள் எண்ணும் அல்லது சொல்லுங்காரியமா? இப்படியொருவர் சொல்ல ஒரு விவேகி அதனைக்கேட்பின், இது மனமுதலியவற்றின் இயல்பறியாத அவிவேகச்சொல் என்று கேவலமாய் மதித்துவிட மாட்டாரா? தங்கள் அறியாமையைப் பிறர்மேல் ஏற்றிக் காமாலைக்கண்ணன் உலகமெல்லாம் மஞ்சளாய்ப் போயிற்றென்பதுபோல விக்கிரகாராதனை செய்வாரை அறிவில்லாதவரென்று எண்ணுவதென்னை? இனி கடவுளின் ஞானவடிவை மனத்தாலும வாக்காலும் காயத்தாலும் வழிபடலாமென்பரேல், அவர் அவாங் மனோகோசரப் பொருளல்லர், அவைகட்கு எட்டுபவரென்றும் சொல்லவேண்டும். அப்படியிவர்கள் சொல்லுவார்களா? சொல்லினும் ஒவ்வுமா? இனிக் கடவுளை அறிவால் வணங்குவோமென்பரேல், மனமுதலிய கரணங்களும் இந்திரியங்களும் இல்லாமல் அறிவினால் மாத்திரம் தொழில் செய்வது எப்பொழுது? நமது இந்தச் சாக்கிர நிலையில் எந்தக் கரணங்களையேனும் எவராயினும் ஒரு கணப்பொழுதேனும் விட்டிருக்கவியலுமா? விட்டாற்றான் அறிவு நிகழுமா? கருவிகரணங்களை விட்டிருப்போமென்னின், அப்படி விட்டிருக்கு நிலை சுழுத்து துரியங்களாய்விடுமே; விழித்திருக்கும்போதின்றி நித்திரை செய்யும்போது கடவுளை வணங்குவார்கள்போலும்! நன்று! நன்று!! இவரது மதிநுட்பம் சாலவியக்கற்பாற்று!! இவர்கள் யாதொரு யோசனையுமில்லாமல் வறிதே கண்ணை மூடிக்கொண்டு விக்கிரகாராதனம் பயனற்றதென்பதால் வரும் பயனென்னை? கூடுமோனால் விக்கிரகாராதனமின்றிக் கடவுளை வணங்குதற்கு ஒரு வழி, மேற்கூறிய தோஷாரோபணங்களின்றிச் சொல்லட்டும் பார்ப்போம்.

ஓர் இந்து."

திருநெல்வேலி மாணவர் சங்கத்தின் ஹிந்து மதாபிமானிகளிற் சிலர் விக்கிரஹாராதன விஷயமாய்ப் பிரசுரஞ் செய்திருக்கிற பத்திரிகையிற்கண்ட வினாக்களுக்கு

விடை.

(6-வது வினாவுக்கு விடையின் தொடர்ச்சி)

மனிதரூபங் கொடுப்பதினால் மனிதனுக்குள்ள பல ஹீனதையையும் கடவுளுக்குக் கொடுக்காமலிருக்க முடியுமாவென்ற சந்தேகம் பூர்வபக்ஷிகளுக் கெப்படி யேற்பட்டதென்று தெரியவில்லை. இதுமாத்திரமல்ல; இவர்களெண்ணிய இந்த முடியாமையையே ஹிந்து ஆலயங்களிலுள்ள சில ஆசாரணைகளுக்குக் காரணமாகவும் தப்பிதமாய்க் கூறியிருக்கிறார்கள். ஷை ஆசாரணைகள் இன்னவைகளென்றாவது அவைகளை யெப்படி நடத்திவருகிறார்களென்றாவது கொஞ்சமாவது விசாரிக்காமல் பூர்வபக்ஷிகளால் இந்த வினா செய்யப்பட்டிருக்கிறது. ஆலயத்திற்குள்ளிருக்கிற விக்கிரஹத்திற்கு ஸ்நானஞ் செய்விப்பதும், அலங்கரிப்பதும், விக்கிரஹத்திற்கு முன்பாக நைவேத்தியத்தை வைப்பதும் மேற்கண்ட முடியாமை பற்றியல்ல. விக்கிரஹாந்தர்யாமியா யிருக்கிற பரமேசுவரரிடத்தில் புத்தியைச் செலுத்தி அவருடைய ஸன்னிதியிலிருக்கிறதாக அறிந்த பக்தர்களுடைய நிலைமைக்குத் தக்கபடி ஷை ஸன்னிதானத்திற்கு மரியாதை செய்வதாகவும்பக்தர்களுக்கு இவ்வுலகத்தில் உபயோகப்படக்கூடிய பதார்த்தங்களிடத்தில் பற்றுதலை வெறுத்து ஸகலத்தையும் ஈசுவரார்ப் பணஞ் செய்வதாகவும் உத்தேசங்கொண்டு ஷை உபசாரங்கள் செய்யப்படுகின்றனவே யொழிய ஈசுவாருக்குக் குறைவு ஏற்பட்டு அக்குறையை நீக்க எண்ணங்கொண்டு அவைகள் செய்யப்படவில்லை. ஷை காரியங்கள் பூராவும் பக்தர்களுடைய நிலைமையை வெளியிடுகின்றன. அப்படி வெளியிட்டதினால் இதர ஜனங்களுக்கு நன்மை ஏற்படக் கூடியதாகவு மிருக்கின்றது. மேற்கண்ட உபசாரங்களினால் பரமேசுவாருக்கு ஆகவேண்டிய தொன்றுமில்லை. இவ்வுலகத்திற் கூட இராஜ ஸன்னிதியில் பிரஜைகள் அனே உபசாரங்கள் செய்வது வழக்கமில்லையா? பூர்ணபலங்களை காணிக்கையாக வைப்பது கண்டிருப்ப தில்லையா? ஷை பலங்களை இராஜா அபேக்ஷித்தா பிரஜைகள் கொண்டுபோகிறார்கள்? தங்களுடைய மரியாதையை வெளிப்படுத்துவதைப் பார்க்கிலும் வேறு உத்தேசமுண்டா? இராஜாவுக்கு அபேக்ஷையில்லாம லிருந்தாலும் சந்தோஷத்துடன்கூட காணிக்கை பழங்களை ஸ்வீகரித்துக்கொள்ள வில்லையா? இராஜாவுக்கேற்பட்ட சந்தோஷத்திற்குக்காரணம்பழங்களல்ல.ஷை பழங்களின் மூலமாய் அறியப்படும் பிரஜைகளிடத்தி லிருக்கிற விசு

வாஸமே காரணம். இதுபோலவே இராஜாவுக்குச்சமீபத்திலிருந்து வெண்சாமரம் வீசுகிறார்களே, அது எதற்காக? இராஜாவுக்கு வேர்வையுண்டானபோதா வீசுகிறார்கள்? எந்தப் பிரகாரம் இராஜாவுக்கு வேர்வைமுதலான தொந்தரவுகளில்லாத காலங்களில் மரியாதைக்காக வெண்சாமரம் வீசுகிறார்களோ, இராஜாவுக்கு யாதொரு அபேக்ஷையுமில்லாதஸமயத்தில் மரியாதைக்காக பழங்களை அவருக்கு ஸமர்ப்பித்து அவர் அங்கீகரித்து வருகிறாரோ, அதே பிரகாரம் உபாஸனை செய்யும் பக்தர் ஈசுவர ஸந்நிதானத்தில் தன் பக்தியும் ஈசுவரருக்கு மரியாதை செய்ய வேணுமென்ற எண்ணமும் மேலிட்டு நிர்மலராயிருக்கிற பரமாத்மாவுக்கு ஸ்நானஞ்செய்து வைப்பவர்போலவும், சின்மயமாயும் தேஜோமயமாயுமிருப்பவருக்கு அலங்காரஞ் செய்பவர்போலவும், ஸர்வ பிரம்மாண்டங்களையும் குக்ஷியில் அடக்கி வைத்திருக்கிற பரம புருஷனுக்கு நைவேத்தியஞ் செய்பவர் போலவும், உபசாரங்களைச் செய்து வருகிறார்; ஷை உபசாரங்களையும் ஈசுவரர் அங்கீகரித்து வருகிறார். இந்த உபசாராதிகாரியங்களினால் உபாஸகருடைய பக்தி நன்றாய் வெளியாவதுடன், அவைகள் உபாஸகரை மோக்ஷஸாம்ராஜியத்தின் வழியில் வெகுதூரங் கொண்டுபோய் விடுகின்றன. இந்த உபாஸனையினால் பக்தருடைய ஸ்தூலசூக்ஷ அவயவங்கள் எல்லாம் ஈசுவரர் விஷயத்திலேயே உபயோகப்படுத்தப்பட்டு வருவதினால் உபாஸகர் அவித்தியாகாரியமான பிரபஞ்ச விஷயங்களினின்றும் கொஞ்சங்கொஞ்சமாக விடுபடுகிறார்.

(இன்னும் வரும்.)

G. ராமச்சந்திர அய்யர்.

விக்கிரஹாராதனகண்டன வெதிரேகம்.

(முன்தொடர்ச்சி.)

கடவுளுக்கு ரூபங்கொடுக்கும் பலவீனத்தால் மனித ரூபங்கொடுத்தபோதிலும் அத்துடன் நிற்காமல் மிருகரூபமும் பட்சி ரூபமுமாகிய கேவல ஜெந்துக்கள் ரூபமும் கொடுக்கலாமா, வென்பது துண்டுப்பத்திரிகையின் 5-வது வினா. அதற்கு இவெதிரேகத்தில், நிந்தித்து நிற்பாரது வன்பைக்கொடுக்கும்படி, மாற்றாரைச் சீறும் மன்னன் முகம்போல, ரூபீகரித்து விளங்கிய கருணைக்கறிகுறியாக கடவுள் விக்கிரஹங்களும், சக்கரவர்த்திக்குரிமையாயுள்ளவற்றைப் போலவும் கடவுள் வல்லமைக்கேற்பவும் வாகன தேவதாவிக்கிரஹங்களும் மிருகமுதலிய ரூபங்களாக, விதிப்படி அமைக்கப்பட்டுளதென்றும் கிறிஸ்தவருள் ஒரு சாராராகிய கத்தோலிக்கர் புறவிக்கிரகத்தைச்செய்துவைத்துவணங்குவதினால் புறமதஸ்தர்கட்கு மிது பொருத்தமாவதென்றும் விடையளிக்கப்பட்டுளது. இவ்விடையின்கருத்து இன்னதென வெனக்கு நன்றாய்ப் புலப்படவில்லை. இரணியன் முதலியோர்போல் தன்னை நிந்தித்து நின்றோரது வன்பைக்கெடுக்க நரசிம்மமுதலிய மிருகம் பட்சி முதலிய ரூபங்களாகக் கடவுள் அவதரித்திருப்பதாகவும், மாற்றாரைச் சீறு மன்னன் முகம்போல ஷை அவதாரங்களில் கடவுள் கோபக்குறியுடன் ரூபீகரித்து விளங்கியிருப்பினும் கருணைபற்றியே அவ்விதம் கடவுள் அவதரித்திருப்பதாகவும் அவ்வித அவதாரங்களில் கடவுள் ரூபீகரித்து விளங்கிய ரூபங்களை விதிப்படி அமைத்து வணங்குகிறார்களென்பதும் ஷை விடையின் கருத்தென்று நான் நினைக்கிறேன்.

இரணியன் முதலியோருடைய வன்பைக் கெடுக்கக் கடவுள் ரூபீகரித்து விளங்கியதாய்ச் சொல்வதுடன் யாருடைய வன்பையாவது கெடுக்கவேண்டும் என்ற நோக்கமும் கோபக்குறியுமின்றி பன்றி ஆமை முதலிய ரூபங்களாகவும் கடவுள் ரூபீகரித்து விளங்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க இரணியன் முதலியோருடைய வன்பைக்கெடுக்க ரூபீகரித்து விளங்கிய அவதாரங்களைமட்டும் இவ்விடையிற் குறிப்பிட்டிருப்பதென்னையோ? ஒருவனுடைய வன்பைக்கெடுக்கவாவது வேறு எவ்வித காரணம்பற்றியாவது கடவுள் மிருகம் பட்சி முதலிய ரூபங்களாய் அவதரித்து விளங்கவேண்டியதென்னை? கடவுள், தாம் செய்ய நினைத்த காரியங்களை நினைத்த அளவிலேயே செய்துமுடிக்க வல்லவரல்லவோ? மிருகம் பட்சி முதலிய ரூபங்களாய் கடவுள் அவதரித்ததாகச் சொல்வதைச் சிலர்சந்தேகிக்கக் கூடும்.

அவ்விதம் அவதரித்ததாய்ச் சொல்வது உண்மையோ அல்லவோ என்னும் விவகாரத்தில் புகாமலும் அவ்வவதாரம்பற்றி விடையளிக்காமலும் யுக்திக்குப் பொருத்தமான விடை ஏதாவது வரக்கூடுமோவென்றெதிர்பார்த்து ஷை துண்டுப் பத்திரிகையில் இவ்வினாக் கேட்கப்பட்டிருக்கிறதாகத் தோன்றுகின்றது. கடவுளை வழிபடுவது ஜீவாத்மாவின் அபிவிர்த்தியின்பொருட்டாகவின் வழிபடுந்தன்மை ஜீவாத்மாவின் அபிவிர்த்திக்கு உதவியாக இருக்க வேண்டுமென்பது எனது துணிவு. ரூபமின்றிக் கடவுளை வழிபடுவது இயலாது என்று ஏற்பட்டாலும் கடவுளை வழிபடுவதற்கு அமைக்கப்பட்ட விக்கிரஹங்கள் முழுமுதற் கடவுளுடைய கருணையையும் ஞானத்தையும் சகலவித கல்யாண குணங்களையும் ஞாபகப்படுத்தும்படியான விதமாயும், அத்தகைய குணங்கள் வழிபடுவோர்மனதில் உண்டாகும்படி செய்யக்கூடிய விதமாயும் அமைக்கப்பட்டிருந்தால் அது ஆத்ம விர்த்திக்கு அனுகூலமாயிருக்குமென்று நினைக்கிறேன்.

மனிதனிடத்தில் அறிவாற்றலும் அன்பும் சத்திய குணங்களும் அமைந்திருக்கின்றன அல்லது அமைந்திருக்கக்கூடும். மனித ரூபம் இத்தகைய குணங்களை ஞாபகப்படுத்தவும் தோன்றும்படி செய்யவும் கூடும். இக்காரணம் பற்றி மனித ரூபத்தைக் கடவுளுக்குக் கொடுத்து வழிபடுவது ஒருவாறு சரியென்று சொன்னாலும் அத்தகைய குணங்களை ஞாபகப்படுத்த உதவியாயிராத மிருகம் பட்சி முதலிய ரூபங்களை கடவுளுக்கு அமைத்து வழிபடலாமாவென்பது துண்டுப் பத்திராதிபர்களின் கருத்தென நினைக்கிறேன். அவ்வித கருத்துக்கொண்டு வினவிய இக்கேள்விக்கு அவ்வித சந்தேகம் நிவிர்த்தியாகும்படி இவ்வெதிரேகத்தில் விடை பகர்ந்திருப்பதாகத் தோன்றவில்லை. துண்டுப்பத்திரிகையின் நான்காவது வினாவில் புறமதஸ்தர்களுடைய சில கொள்கைகளைப் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பதினால் அங்குக் குறிப்பிட்டிருக்கிற புறமதஸ்தர்களுடைய எல்லாக் கொள்கைகளையும் துண்டுப்

பத்திராதிபர்கள் அங்கீகரித்ததாய் ஏற்படவில்லை. புருவிக்கிரகத்தைச் செய்து வைத்து கத்தோலிக்கர் வணங்குவது சரியென்று துண்டுப்பத்திராதிபர்கள் சொன்னதாயில்லை. அதையொரு சமாதானமாகவைத்து இவ் வெதிரோகத்தில்விடை பகர்ந்திருப்பது எவ்வாறு பொருத்தமாயிருக்குமோ தெரியவில்லை.

(இன்னும் வரும்)

பாளையங்கோட்டை 12—2—05 } பாளையங்கோட்டை என்னும் திருமங்கைமாநகர்வாசி.

Instructions on the Elementary Lessons in the "Gospel of Health".

'சுகரண விவரண சாஸ்திர ஸாரம்'

'சுகரண விவரணம்' என்பது (சு=சுகம்; கரணம்=செய்கை; விவரணம்=விபரம்) ஜீவப் பிராணிகளின் உறுப்புக்களையும் அவற்றில் நடந்தேறும் சுகத்துக்கடுத்த செய்கைகளையும் பற்றி விவரிக்கும் நூல் என்று பொருள்படும். ஆங்கில மொழியான "physiology" என்பது, கிரேக்க மொழிகளான "physis"(=பிரகிருதி); logos (=விவரம்); என்ற இரு சொற்களினின்றும் ஆக்கப்பட்டது. ஆகவே சொற்பொருளின்படி பிரகிருதி விஷயமான கலைஞானங்கள் பலவற்றிற்கும் செல்லும் இச்சொல், இப்பொழுது உயிருள்ளனவான பிராணிகளுக்கு அமைந்துள்ள உறுப்புக்களின் தொழில்களைப் பற்றிச் சொல்லும் நூலுக்கே காரண இடுகுறியாய் வழங்குகின்றது. (இந்நூற் பயிற்சிக்கு ஆடு, குழிமுயல் முதலியவற்றைச் சோதனை பண்ணிப் பூதக்கண்ணாடியின் துணைகொண்டு, கண்ணால் ஒவ்வொரு உறுப்பையும் பார்த்தல் அத்தியாவசியகமாம். (அதற்கு வேண்டுவனவாகிய சாமான்கள் எளிதிற் கிடைப்பனவாம். உபயோகமான ஓர் பூதக்கண்ணாடியையும் ரூ 45-க்கு வாங்கலாம்.)

ஒரு பொற் கடிகாயந்திரம் பார்வைக்கு மிகவும் அழகானவஸ்து; என்றாலும் அதைப் பிரித்துப்பார்த்தால்தான் அதன் நுண்ணிய சக்கரங்கள் முதலாக, மணி, நிமிஷம் இவற்றை உள்ளவாறு காட்டும் கருவிகளை யறிந்து, இவ்வுபயோகமான வஸ்து எவ்வளவு யுக்தி புத்தியோடு இயற்றப்பட்டிருக்கிறதென்று வியப்படைகிறோம்; அவ்வாறே மனித சரீரத்தின் உட்புறத்தைப் பரிசோதனை செய்கையில் தான், அதன் பல்வேறு உறுப்புக்களையும் கருவிகளையும், அவற்றால் நிகழும் அதிசயமான விஷயங்களையும்பற்றி உள்ளபடியறிந்து, ஜீவகோடிகளெல்லாவற்றிற்கும் முதன்மையாக மனிதவுருவைச் சித்திரித்த எம்பெருமானின் மாயையை நம் சிறு சொற்களால் வியந்து பேசுகிறோம்.

ஒரு மேனாட்டு வித்வசிரோன்மணி கூறியவாறு, "மனித வர்க்கத்திற்கேற்ற கல்வி மனிதனைப் பற்றியே இருத்தல் வேண்டும்." பல்லாண்டுகளாக மகாமேதாவிகள் பல்லோர் தங்கள் உயிர் வாழ்க்கையின் இன்பமும் பயனும் 'தெய்வத்தன்மையுற்ற மனித சரீர' வாராய்ச்சியே யென்று கருதி, தம்மா லியன்றவாறு கலைஞானங்களின் உதவி கொண்டும், சிந்துவின்கட் செறி சிறுமணலையும் பர்வதாகாரமாகக் காட்டும் பூதக்கண்ணாடியாதிய கருவிகளின் துணைகொண்டும், "தெய்வத்தானாகா தெனினும் முயற்சிதன், மெய்வருத்தக் கூலிதரும்" என்றதிருக்குறளின் கருத்தைக் கடைப்பிடித்து, தம் விடாமுயற்சியாலும் கடும் பொறுமையாலும், நம் உடம்பைப் பற்றியும், அதனுள் நிலவும் உயிரினைப்பற்றியும் எண்ணிறந்த அதிசயமான விஷயங்களை யறிந்து "தாமின்புறுவ துலகின்புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந்தா"ராகலின், தாம் நுண்ணறிவால் அறிந்த அரிய பெரிய விஷயங்களை யாவர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெள்ளிதின் விளங்குமாறு பன்னூல்கள் எழுதிவைத்திருக்கிறார்கள்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்ற புலவர் பெருமானின் வாக்கியப்படி, இத்தகைய நூல்களைக் கற்றலிற் றமக்கு நிகராவா ரிம்மையினில்லையெனும்படி கற்றத, தாம் கற்றனவற்றைத் தவறாது அநுட்டித்தலும் செய்து தாமும் மேன்மையடைந்து, பிறர்க்கும் பயன்பட்டு வாழவேண்டுவது அறிஞர் கடனாம். ஆயினும் இப்படிப்பட்ட விஷயங்களில் என்னாலும் இயன்றவாறு சிற்சிலவற்றை சங்கிரமாக எவர்க்கும் இனிமையாக எளிதில் விளங்குமாறு எழுதுதல் வேண்டுமென்னும் ஆசை மீதூர்தலால் இத் தலைப்பெயர்பூண்ட வியாசங்கள் ஈண்டு எழுதப் புகுந்தேன்.

"பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை" என்று ஔவைப் பிராட்டியார் கூறியருளியபடி, நம் வாணாள் நோய்கள் அணுகுற்று வீணாளாக்கினும், நோய்க்கிடங் கொடாது அதை விலக்கக்கூடிய சில பிரமாணங்களும் உண்டு. தேக சுகத்திற் காதாரமான இப் பிரமாணங்களைக் கூறும்நூலை நம்மவர்கள் வேதம் நான்கொடு ஒப்பமதித்து 'ஆயுர் வேதம்' என்று வழங்கி வந்தார்கள்.

இப்பிரமாணங்களுள் மிக முக்யமானவற்றிற் சில நாம் உட்கொள்ளும் உணவைப்பற்றிக்கூறுவனவாம். நமது ஜீர்ண வுறுப்புகளைப் பேணிக்கொள்வதற்கேற்ற பிரமாணங்களைக் கற்பதற்குமுன், அவ் வுறுப்பு வகைகளின் விவரத்தையும் தொழிலையும் கற்க முயல்வது அவசியம். ஆனது பற்றி மறுமுறை "ஜீர்ணவுறுப்புக்களைப்" பற்றியே பிரஸ்தாபிக்கப்படும். 'நெருப்பு எரிகிறதெ'ன்ற இயற்கைப் பிரமாணத்தை யறியாதிருக்கும் ஒரு குழந்தை தீயிற் கையிடினும் அனற் கொடுமையால் வருந்துவதுபோல 'சுகரண விவரண'ப் பிரமாணங்களை யறியாதிருப்பினும், அப்பிரமாணங்கள் மீறப்படிற் கெடுதிசெய்து நோய் விளைக்கத் தடையில்லை என்பதற்கு ஐயமில்லை. இப் பிரமாணங்கள் நம் தேக சௌக்கியத்திற்கும் மனோற்சாகத்திற்கும் இன்றியமையாதனவாதலின் மிகவும் கவனிக்கவேண்டியவைகளாம்.

நமது உணவை 'போஜன ஸுக'த்திற்காக மாத்திரம் உட்கொள்வதென்று எண்ணி நடந்தால், நாட் செல்லச் செல்லப் பெருந் தீனிக்காரராய்விடுவோம் என்பது திண்ணம். ஆதலின் இளமையிலேயே ஒரு குழந்தைக்கு உணவுட்கொள்ளும் முறையைக்கற்பித்து, தான் எதை நன்கு விரும்புகிறதோ, அதனிலும் அக் குழந்தைக்கேற்ற உணவெதுவோ அதையே புசிக்கும்படி செய்வது பெற்றோர் கடன். ஒரு குழந்தைக்கு வேண்டிய பூஸ்திதி முதலிய

ஆஸ்திகளை வைப்பதிலும், அதை தேகசுகமும் பெலனுமுடைய வாலிபனாக இவ் வுலகவாழ்க்கையாகிற நீர்வழியில் நீந்திச்செல்லத் திடனேடுவிடுதலே சால்பு. எனெனில் பலவீனமும் வியாதியும் கொண்ட மாக்கள், அளகேசனைப் பழித்து அளவற்ற நிதியம் படைத்தாரேனும், நாடோறும் 'நெற்றி வியர்வை நிலத்தில் விழ' உழைத்து உண்டு களித்திருப்பவனிலும் சுகம், சந்தோஷம் இவற்றில் மிகவறியரேயாம். கோடீசுவரன் பணத்தில் பெரியனுயினும் சுகத்தில் வறியன், அவன் பணம் குன்றுபோலிருந்தாலும், நோயாற் குன்றிய மேனியனேயாம். அமுதுபோன்ற பரமான்னம் இலையிற் படைத்திருப்பினும், வயிற்றில் பசியெழாது வாடுகிறுன். மாடமாளிகையில் வசிக்கினும், தான் 'குடியிருக்கும் வீடு' (=தேகம்)நோயுற்றிருப்பதாம். மெல்லியஇறகுகளாலான மஞ்சத்தில் அவன்படுக்கினும், அதுவும் அவனுக்கு மெதுவாயிராமலும், நித்திரை பிடிக்காமலும் சிந்தை நைந்து வருந்துகிறுன். பாடுபட்டுத் தன் உதாத்தூண்பெற்றுக் காலங்கழிக்கும் "ஏழைக் குடியானவன்" அரோகதிடகாத்திரமும், பூர்ணமான ஜீர்ணமும், பாறையிற் படுக்கினும் ஆனந்தமான நித்திரையும், நோய்களின் பெயரையும் கேட்டிராத 'அறியாமையும்' உடையனுய், கோடீஸ்வரப் பிரபுவும் பொறுமைகொண்டு பெருமூச்சு விடத்தக்க அதிநிதியம் பெற்றுள்ளவனுகிறுன். பிரபுவுக்குத் தன் பொற்குவியல்களெல்லாம் கொடுக்கமாட்டாத தேகசுகமும் மனக்களிப்பும்பெற்றவனுன நமது 'ஏழைக்குடியானவனே' நாம் வியந்து புகழத் தக்கவனும். சுகத்தின் அவசியமும் இன்பமும் நமது அன்பர்கள் பலரும் அறிந்த விஷயமாயினும் அதன் விதிகளை யநுஷ்டிப்பார் மிகச் சொற்பமானவர்களேயாதலால், இங்கு சுகத்தின்பயனை விரித்து எழுதுதல் 'கொல்லர் தெருவில் ஊசி விற்க'ப் பார்த்தலாகும்; ஆனுல் அவற்றை நன்கறிந்து அநுஷ்டிக்கவேண்டிய வழியையே தொகைவகை விரியில் என் சிற்றறிவிற்குப் புலப்பட்டவாறு இனிக் கூறுவேன்.

இவ் வியாசத்தின் நோக்கம் யாதெனில், இத்தேசத்திற்கு இனி அரண்போன்றிருக்கும் வாலிபரையும் மாணவரையும் தந்தையால் வகுக்கப்பட்ட சராசரமனைத்தினுள்ளும் மிக விந்தையான தத்தம் சரீரபாவங்களைச் சரியானபடி கவனித்து செவ்விய மேனியராகவும் சிறந்த நோக்கினராகவும் வளரும்படிக்குத் தூண்டுவதேயாம்.

(To be continued)

P. SRINIVASACHARI,
Senior F. A. Class
Hindu College, Tinnevelly Bridge.

சமாசாரக்குறிப்பு.

நாரதர்.

சென்ற தைமீ 20-உக்குச் சமமான சென்ற பிப்பிரவரிமீ 1-உ யன்றிரவு, "திருநாவுக்கரசி"ன் முதல் வருஷ பூர்த்தி மஹோத்ஸவத்தின் பொருட்டு, இவ்வூர் ஸ்ரீ அகவரத்தான நாதப்பிரபுவின் திருக்கோயிற் பிரகாரத்தே திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் "திருநாவுக்கரசு நாயனுர்" முதலிய உண்மை நாயன்மார் அறுபத்து மூவர்க்கும இயன்ற வகையாற் குருபூஜா மகோத்ஸவம் சிறப்பாய் நடந்தேறியது. இவ்வூர்; சைவப்பிரகாச சபையிலே, இவ்வூர், சிவதேவஸ்தான சைவப்பிரசாரகர் மக-ா-ா-ஸ்ரீ சங்கரமூர்த்தி முதலியாரவர்களால் திருநாவுக்கரசு நாயனுரது அத்தியற்புத அதிமதுர திவ்விய சரித்திரமும், ஸ்ரீ உமாபதிசிவம் அருளிய புராண சாரத்தை மகுடமாகக்கொண்டு விரித்துரைக்கப்பட்டது.

***

திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி பாடசாலை:-இப் பாடசாலை யாழ்ப்பாணம் மக-ா-ா-ஸ்ரீ தப்பய்யா பிள்ளையவர்களால் பிரதிட்டை செய்யப்பெற்று நான்கு வருட காலமாய் நடைபெற்று வருகின்றது. அதில் 60-மாணுக்கர்கள் கல்வி கற்று வருகின்றுர்கள். அவர்களுள் 5வது வகுப்பைச்சேர்ந்த மாணவர்களுள் நான்குபேர்கள் இவ்வருட மாசிமகோத்ஸவ காலத்திலே சைவசமயிகளுக்கு அவசியமான விஷயங்களை முக்கியமான இடங்களில் நின்று பிரசங்கஞ் செய்திட்டார்கள்.

***

தமிழ்வேத பாராயணம்:—மற்றைய வகுப்பு மாணுக்கர்களுள் பன்னிருவர் சுவாமி திருவீதி கொண்டருளும்போது சுவாமிக்குப்பின் திருவாசகத்தையும், கந்தர்கலிவெண்பாவையும் இசையுடன் பாராயணஞ் செய்திட்டார்கள். இவர்களுக்கு சில சிவநேசர்கள் காலையிலும் மாலையிலும் விசேஷமாக விருந்தளித்து உபசரித்து வந்தார்கள்.

***

திருச்செந்தூர் வேதாத்தியயன பாடசாலை;— இது நாட்டுக்கோட்டை நகரத்தாரால் நடைபெறுகின்றது. இதில் மாணுக்கர்களுக்கு தருக்கம் வியாகரண முதலிய வேதாங்கங்களும் கற்பிக்கப்படுகின்றன. திருநெல்வேலியில் நடைபெறும் அத்தியயன பாடசாலையில் அங்கநூல்கள் கற்பிக்கப்படவில்லை.

***

வள்ளியூர்க்கோயில்:-இது இந்தஜில்லா, நான்குனேரித்தாலூகாவிலுள்ளதோர் சுப்பிரமண்யக்ஷேத்திரம்; இங்கே இதுவரை நெடுங்காலமாய், ஆதிசைவர்களே பூசித்து வந்தனராம். இப்போது சிலகாலமாய் அத்திருக்கோயிற்றருமகர்த்தர் மூவருள் இருவர் அவ்வாதிசைவர்களை யாது காரணத்தாலோ நீக்கிவிட்டுப் போற்றிமாரெனப் பெயரிய வேறு பிறரை அவர்க்குப்பதிலாக நியோகித்துப் பூசிப்பித்து வருகின்றனராம். குறித்த தாமகர்த்தர்கள்மேல் அவ் வாதிசைவர்கள் திருநெல்வேலி டிடிஸ்ரிக்கட்டு முனிசிபுக் கோர்ட்டில் வழக்குத்தொடுத்து விசாரணை நடந்து கொண்டிருக்கின்றது. குறித்த திருக்கோயில் காரணுகமப்படி பிரதிட்டை செய்யப்பெற்ற தொன்றும்.

***

வைதிகசைவ பரிபாலன சபை:-இப்பெயரிய சபையொன்று யாழ்ப்பாணம் நல்லூரிலே பிரதிட்டைசெய்யப்பெற்றுள்ளது. இச்சபையின் பெயரே இதன நோக்கத்தை நன்கு விளக்கும். இச்சபை மகாசபை, சிரேட்ட சபை, உபசபை, கிராமச்சபை ஆதியாகப் பற்பல கிளைகள் போக்கிப் பரந்தோங்குவதாகத் தெரிகின்றது.

***

வைதிகசைவபரிபாலினி:—இப்பெயரிய தமிழ்ப்பத்திரிகை யொன்று யாழ்ப்பாணம் நல்லூர் வைதிகபரிபாலன சபையாரற் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. இதிலே குறித்த சபையின் சரித்திரக்குறிப்புகள் அடங்கியிருக்கின்றன.

பிழை திருத்தம்:— இப்புத்தகம 11-ம்பக்கம் முதல் நிறை 3-வது வரியில் நிறுத்தலடையாளத்தை நீக்கி, 5-ம் வரியில் 'உரியர்' என்பதை "ஆவர்" என்று திருத்திப் படிக்க.

" திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ்க"

திருச்சிற்றம்பலம்.

Printed and published by M. Draviam Pillai
Ariyapirakasini Press, Tinnevelly Bridge.